**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை 2011**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதென்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இகநி – 18 இன்படி ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண விடயங்கள் மீள்மதிப்பீடு செய்கையிடுகையில் அந்தச் சொத்துக்களை உள்ளடக்கிய உடமையாக உள்ள ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணகளின் முழுவகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபைக்குச் சொந்தமான முழுக் காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் தலைமை அலுவலக காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரமே மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 1,378 மில்லியனாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஏனைய காணி மற்றும் கட்டிடங்கள் மீளமதிப்பிடாமை காரணமாக அதிகாரசபையின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களீல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இகநி 19 இன்படி சொத்துக்களின் தன்மையின்படி அவர்களுடைய ஐந்தொகையில் செயற்பாட்டிலுள்ள குத்தகைகளுக்குரிய சொத்து விடயத்தை குத்தகையாளர் வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், செயற்பாட்டிலுள்ள குத்தகையின் கீழ் வழங்கப்பட்ட காணிகள் மற்றும் வாடி வீடுகள் அதிகாரசபையின் ஐந்தொகையில் காட்டப்பட்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட அந்தக் காணிகள் மற்றும் வாடி வீடுகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் காணக்காய்வு மூலம்

நடாத்தப்பட்ட மாதிரிப் பரிசோதனையின்படி 56 வாடி வீடுகள் மற்றும் ஏறத்தாழ 6,495 ஏக்கர் பரப்பளவிலுள்ள 166 காணித் துண்டுகள் என்பன அதிகாரசபைக்குச் சொந்தமாக உள்ளன.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்கீட்டுக் கொள்கையின்படி பெறவேண்டியவைகளின் அறவீட்டு நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொள்ளாமல் நட்ட கடன் ஏற்பாட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை 2 முதல் 4 ஆண்டுகள் வரை இருக்கின்ற கடன்பட்டோரிற்காக 25 % முதல் 100 % வரை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் அபிவிருத்திக் கிரயம் வருடாந்தம் 25 % இல் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்திக் கிரயம் மற்றும் அவற்றின் தன்மையை இனங்காணும் நோக்கில் கணக்கீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்ட கால மற்றும் குறுகியகால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களிலிருந்தான வருமான சேகரிப்பு இனங்காணுதல் மற்றும் கணக்கீ செய்யப்படுவதற்கான கணக்கீட்டுக் கொள்கை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,217,690 தொகையான செலுத்தவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) பாசிக்குடா சுற்றுலாத்துறை ஓய்வு விடுதி செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட ரூபா 66,057,525 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

உரிய உப பதிவேட்டு மீதிகளுயுடன் மீதிகள் இணக்கம் செய்யப்படாமை காரணமாக அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களிற்கும் தொடர்புபட்ட உப பதிவேடுகளிற்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விபரங்கள் | நிதிக் கூற்றுக்களின்படி மீதி | உபபதிவேட்டு விபரம் | உப பதிவேட்டின்படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை மநாட்டுப் பணியகத்திடம் இருந்து பெற வேண்டியவை | 2,316,084 | எஸ்எல்சீபீ இன் கணக்குகள் | 3,834,488 | 1,518,404 |
| தளபாடம் | 8,499,982 | சொத்து மெய்மையாய்வு அறிக்கை | 3,077,269 | 5,422,713 |
| நானாவித சொத்துக்கள் | 11,666,834 | -மேற்படி- | 1,378,440 | 10,288,394 |
| தரவுமுறைப்படுத்தல் உபகரணங்கள் | 40,169,884 | -மேற்படி- | 2,646,750 | 37,523,134 |
| கட்லெறி மற்றும் சில்வர் | 13,379 | -மேற்படி- | 16,450 | 3,071 |
| பதிவேட்டுப் பொருட்கள் | 2,399,645 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | 1,839,562 | 560,083 |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின்படி, ரூபா 16,399,657 தொகையான வியாபார கட்னபட்டோரில், ரூபா 1,862,804 ஆன தொகை 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் ரூபா 129,649 ஆன தொகை 3 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. மேலும், ரூபா 1,619,103 தொகையான நானாவித கடன்பட்டோர் 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, ரூபா 2,480,205 தொகையான சில்லறைக் கடன்கொடுத்தொரில், ஏறத்தாழ 96 % உண்மையானதாக இருக்கவில்லை. எவ்வாறாயினும், கணக்குகளிலிருந்து அந்தப் பொறுப்புகளைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறவிடவேண்டியவற்றின் தன்மைகளை கருத்திற்கொள்ளாமல், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்காக ரூபா 4,162,242 மற்றும் ரூபா 10,097,754 ஆன தொகைகள் ஐயக் கடன்களிற்கான ஏற்பாடாக செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 926,057 பெறுமதியான 28 மறுக்கப்பட்ட காசோலைகள் 1 முதல் 9 ஆண்டுவரை வீச்சான காலமாக நிலுவையாக இருந்த பொதிலும் நிதிப்பிரமாண இல 189 இன்படி அந்த காசோலைகளின் பெறுமதியை அறவிடுவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 113,305,976 கூட்டுமொத்தத் தொகையான ஐந்து கணக்கு விடயங்கள் ஆதாரமான ஆவணங்கள், செலவின் விபரங்கள், அளவீட்டு விபரங்கள், பயன்படுத்திய பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் சான்றிதழ்கள் போன்ற அத்தகைய ஆதாரமான சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. மேலும், அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் கணக்காய்விற்காக உரித்துறுதிகள்/ சுவீகரிப்பு உத்தரவாதங்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 2 இன் பிஈடி/12 ஆம் இலக்க நல்ல ஆழுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிகள் | |
| (i) அத்தியாயம் 9 இன் 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒத்திசைவுடன் சேர்த்து சபை மற்றும் அமைச்சால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையானது ‘‘ஒரு நிறுத்தல் பஜக்கியம்’’ என்ற பெயருடைய புதிய பிரிவுக்கு உத்தியொகத்தர் தொடரபில் இந்த தேவைப்பாடுடன் இணங்குவதற்கு தவறியிருந்தது. |
| (ii) அத்தியாயம் 9 இன் 9.12 ஆம் பிரிவு | முயற்சிகளால் பின்பற்றப்படுகினற எந்தவொரு நலன்புரித் திட்டமும் பொது திறைசெரியின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். எவ்வாறாயினும் அதிகாரசபையானது ஊழியர் மருத்துவ காப்புறுதித் திட்டத்திற்காக அங்கீகாரம் பெறுவதற்கு தவறியிருந்தது. |
| (iii) அத்தியாயம் 9 இன் 9.14.1 ஆம் பிரிவு | மனித வள முகாமைத்துவம் தொடர்பான சகல விடயங்கள் மீதான விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்கும் மனித வள முகாமைத்துவம் மீதான அத்தியாயம் |

| | | |
|---|---|---|
| | | ஒன்றுடன் நடைமுறை கைநூல்கள் திறைசேரி செயலாளரின் ஒத்திசைவுடன் சேர்த்து சபையால் அங்கீகரிக்கப் பட்டிருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையானது அத்தேவைப்பாடுடன் இணங்குவதற்கு தவறியிருந்தது. |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பிரிவு | அடுத்த ஆண்டிற்கான விரிவான திட்டத்துடன் சேர்த்து குறைந்தது 3 ஆண்டுகளை மேவி கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையானது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி கொள்வனவு திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு தவறியிருந்தது. |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டலின் 4.3.5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | அளவீட்டுப் பட்டியல் தயாரித்தல், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் சான்றுபடுத்தல் கொள்வனவுகள் தொடர்பான கேள்வி கோரல் என்பவற்றிற்காக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் கற்பிட்டியில் இறங்குதுறை நிர்மாணத்திற்காக பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந்திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அதிகாரசபைக்குச் சொந்தமான கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றிற்கான நிலையான சொத்துப் பதிவேடு சுற்றறிக்கை வேண்டுதலின்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 சனவரி 11 ஆந்திகதிய பிஈடி/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறாறு அரச நிறுவனங்களின் காசு மிகைகள் அடுத்த 6 மாதகால தொழிற்படு மூலதன |

| | |
|---|---|
| | தேவைகளை கருத்திற் கொண்ட பின்னர் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது திரட்டு நிதியத்திற்கு மிகைக் காசினை செலவு வைத்திருக்கவில்லை. கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீட்டின்படி மீளாய்வாணடிற்கான காசு மிகைகள் சுமார் ரூபா 100 மில்லியனாக இருக்க வேண்டும். |
| (ஊ) 2007 ஏப்ரல் 5 ஆந்திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை கல்பிட்டி செயற்திட்ட பதவியினருக்கு வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்களிற்காக ஐ.அ.டொலர் 30 மில்லியனிற்கு மேலான வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டங்களிற்காக குறித்துரைக்கப்பட்ட சம்பளங்களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட உத்தியோகத்தர்களெனக் கருத்திற்கொண்டு ரூபா 3,780,253 ஆன தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 702(3) | அதிகாரசபையால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளினை பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | பத்து சந்தர்ப்பங்களில் ஆகக் கூடிய எல்லையான ரூபா 20,000 ஐ விஞ்சி உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஏ) | தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VI இன் 2.10 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்புகள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள ஏற்ற கொடுப்பனவுகள் ஊழியர்களிற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

இரண்டு சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்காக தனியார் தரப்பினரிடமிருந்து காணி சுவீகரிப்பிற்காக கல்பிட்டி மற்றும் பென்தோட்டை ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களில் 2008 ஆம் ஆண்டில் ரூபா 112,897,975 ஆன தொகைகள் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வைப்புச் செய்வதற்கான சம்மதம் மற்றும் அனுமதிகள் உரிய மாட்ட செயலாளர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 72,273,514 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 132,206,537 ஆன மிகையினை விளைவித்திருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 59,933,023 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 80,946,951 ஆல் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் வெளிநாடு செல்வோர் வரி மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றின் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளின் அதிகரிப்புக்கான பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் வருமானம் முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 257 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 345 மில்லியனாக இருந்தமை 34 % அதிகரிப்பை பிரதிநிதித்துப்படுத்துகின்றது. மீளாய்வாண்டின் போது சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக செலவழித்த செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 185 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 213 மில்லியனாக இருந்தது. ஆதலால், 15 % அதிகரிப்பைக் காட்டுகிறது. மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் வருமானம்

மற்றும் செலவினத்தின் மாற்றங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2011 | 2010 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | ரூபா (மி) | ரூபா (மி) | ரூபா (மி) | % |
| குடியகல்வு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி | 235 | 201 | 34 | 16 |
| ஏனைய வருமானம் | 110 | 56 | 54 | 96 |
| நிர்வாகச் செலவினம் | 123 | 108 | 15 | 13 |
| வியாபாரம் தொடர்பான செலவினம் | 41 | 30 | 11 | 36 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவினம் | 49 | 47 | 2 | 4 |
| தேறிய மிகை | 132 | 72 | 60 | 83 |

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| உரிமை மூலதன விகிதங்கள் | நியம விகிதம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2.1 | 2.75 | 2.51 | 3.10 |
| விரைவு விகிதம் | 1.1 | 2.74 | 2.49 | 3.08 |

மேற்குறிப்பிட்ட விகிதங்கள் நியம மட்டத்திற்கு அண்ணளவாக்கப்பட்டிருந்த போதிலும் குறுகிய மற்றும் நீண்ட கால முதலீடுகளில் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டு முழுவதும் வங்கிக் கணக்கில் ரூபா 100 மில்லியனிற்கு மேலான காசு மிகை இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விடுதிச் செயற்பாடுகளின் செயலாற்றல்

அதிகாரசபையின் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் 7 சுற்றுலா விடுதிகள் உள்ளன. 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 716,334 ஆன தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 5,355,575 ஆன விடுதிகளின் தேறிய திரண்ட மிகைகள் உள்ளன. ஐந்து விடுதிகளைத் தவிர ஏனையவைகள் மிகையான மேந்தலைகள் காரணமாக நட்டத்தில் செயற்பட்டன. இதன்விளைவாக விடுதிச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த இலாபத்தன்மை உருவாக்கப்பட்ட மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது 6.5 % ஆக மட்டே இருந்தது.

### 3.2. முகாமைத்துவ திறமையீனங்கள்

அதிகாரசபையின் காணிகள் மற்றும் ஆதன முகாமைத்துவம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணக்காய்வு மூலம் நடத்தப்பட்ட மாதிரிச் செவ்வையின்படி, நாடு முழுவதும் 166 இடங்களில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 6,495 ஏக்கர் காணிகள் மற்றும் 56 வாடி வீடுகள் அதிகாரசபையின் சார்பில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதிகாரசபையில் அந்த ஆதனங்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் முகாமை செய்யும் நோக்கில் பொருத்தமான முறைமைகள் மற்றும் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதன்விளைவாக அதிகாரசபை ஆதனங்களின் பாதுகாப்பு இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கிய வகையில் அவற்றினுடைய கணக்கீடு, காணிகள் மற்றும் ஆதனங்களிடமிருந்தான அதிகாரசபைக்கான பொருளாதார நல முன்னெடுப்புகள் போன்ற அத்தகைய ஆதன முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கங்களை எய்துவதற்கு தவறியிருந்தது.

(ஆ) ஆதனங்களின் உரித்துறுதிகள், மாற்றங்கள் மற்றும் மேலதிகங்கள், அபிவிருத்திகள் போன்ற விபரங்களைக் காட்டுகின்ற ஆரம்ப கட்டுப்பாட்டு அளவீட்டான காணி மற்றும் கட்டிடங்களிற்கான பதிவேடு காட்ட பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளளிப்பு அடிப்படையில் அதிகாரசபையினால் செய்யப்பட்ட ரூபா 2,966,212 தொகையான நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ஆரம்ப செலவினமானது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் அனுமதிக்க்பபடாத செலவினமாகக் கருத்திற் கொண்டு செலவினத்தை மீளளிப்பு, செய்யாமையால் மீளாய்வாண்டிற்கான போது நட்டமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,736,216 தொகையான பெறவேண்டிய வாடகை வருமானம் உரிய குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

கற்பிட்டிப் பகுதியின் சமூக அபிவிருத்தி நோக்கத்திற்காக ரூபா 16,772,988 ஆன தொகை செலவு செய்யப்பட்டு கற்பிட்டி செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபையால் இறங்குதுறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாணம் தவறியமை கராணமாக, அதே நொக்கத்திற்காக ‘‘மகநெகும செயற்திட்டத்தின்’’ கீழும் இன்னொரு இறங்குதுறை அதே இடத்தில் நிர்மாணம் செயற்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட முழுச் செலவும் பயனற்றதா ஏற்பட்டிருந்தது.

**3.5 செயற்திட்டங்களிலுள்ள தாமதம்**

ரூபா 5,521 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேலதிகமாள 4,000 அறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணித்தல் பட்டியலிடப்பட்டிருந்த கற்பிட்டி ஒருங்கிணைந்த சுற்றுலாவிடுதிச் செயற்திட்ட அமுலாக்கல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளில் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு 2008 இல் அமைச்சரவை மற்றும் திறைசேரியின் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் என்பவற்றிடமிருந்து கற்பிட்டி ஒருங்கிணைந்த சுற்றுலாவிடுதிச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு கொள்கை பிரிவில் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நான்கு ஆண்டுகள் கடந்த பின்னர் கூட செயற்திட்டமானது இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கல் திட்டம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ செலவினங்கள் ஆலோசனை, மற்றும் மூலதன வேலைகள் போன்றன உள்ளடக்கிய விரிவான பதீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, மீளாய்வாண்டு இறுதிவரை இனங்கண்ட காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 92.6 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் தலைவர் பின்வருமாறு 2012 ஆகஸ்ட் 21 இல் எனக்கு அறிவித்திருந்தார்,

"கேஜரீஆர்பி இன் செயற்திட்ட வேலைகளிற்காக ஏற்பட்ட செலவினம் கேஜரீஆர்பி செயற்திட்டத்தால் தொடங்கப்பட்டிருந்த அலுவலகம், முதலீட்டு ஊக்குவிப்புகள் மற்றும் வீதிகள் மற்றும் இறங்குதுறையின் ஆரம்ப நிர்மாணம் என்பவற்றின் செயற்பாட்டிற்காக ஏற்பட்டிருந்தது" என்பதாகும்.

(ஈ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, குத்தகை உடன்படிக்கைகளில் அபிவிருத்தியாளர்களிற்கு இரண்டு தீவுகள் மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காணி மதிப்பீடு மற்றும் அபிவிருத்தியாளர்களின் தெரிவு அடிப்படை என்பன தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1981 இன் 57 ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின்படி சுற்றுலாத்துறை நோக்கத்திற்காக தீவுகளை அபிவிருத்தி செய்வதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் தலைவர் 2012 ஆகஸ்ட் 21 இல் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார்,

"கேஜரீஆர்பி செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு முன்னைய சுற்றுலாத்துறைக்கான அமைச்சினால் அங்கீகரிக்படப்பட்டிருந்த.கொள்வனவு ஆவணங்கள் மூலம் அந்த தீவுகளை குத்தகைக்கு விடுவதற்காக முக்கியமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தன." என்பதாகும்.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 17 சேவை வகுதியின் கீழ் செய்யப்பட்ட அதிகாரசபையின் ஊழியர் எண்ணிக்கை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் முறையே 176 மற்றும் 157 ஆக இருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய படிகளாக அதிகாரசபையால் முறையெ ரூபா 61.9 மில்லியன் மற்றும் ரூபா

53.8 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தன. ஆதலால், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ஒரு ஊழியருக்கான கிரயம் முறையே ரூபா 351,705 மற்றும் ரூபா 342,675 ஆக இருந்தமையைக் காட்டுகின்றது.

### 3.7 போக்குவரத்து அணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, மீளாய்வாண்டின் போது 10 வாகனங்களின் எரிபொருள், பராமரிப்பு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 6,468,652 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரயாணம் செய்த தூரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வாகனங்கள் வாடகைக்கு பெற்றமைக்காக ரூபா 6,035,408 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. என்னவாறாயினும் வாடகைக்குப் பெற்ற வாகனங்கள் மூலம் பிரயாணம் செய்யத தூரம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

## 4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 முதல் 2012 வரையான காலத்திற்காக அதிகாரசபைக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டை உள்ளடக்கி மேற்குறிப்பிட்ட திட்டத்தை திருத்தி 2011 முதல் 2016 வரையான காலத்திற்காக புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சில பிரதான நடவடிக்கைகள் கூட்டிணைந்த திட்டத்தின் வழிகாட்டலைப் பின்பற்றாமல் அமுலாக்கப்பட்டிருந்தன. உதாரணமாக கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மூலதனத் தன்மைக்காக ரூபா 73.3 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மூலதன செலவினத்திற்காக விரிவான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியானவற்றிக்கும் இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
(இ) செயற்திட்ட முகாமைத்துவம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(ஊ) முற்பணக் கொடுப்பனவுகள்